**ஜூன்– 28**

# TNPSC துளிகள்

- வரும் கல்வி ஆண்டிலிருந்து தில்லி அரசுப் பள்ளிகளில் “மகிழ்ச்சிக்கான பாடத்திட்டம்” அறிமுகப்படுத்தப்படும் என்று அம்மாநில அரசு அறிவித்துள்ளது. இந்தப் பாடத்திட்டத்தில் தியானம், தார்மீக விழுமியங்கள் மற்றும் மனஞ்சார்ந்த பயிற்சிகள் இடம் பெறும். இவற்றின் முக்கிய நோக்கம் 'Sarvagun Sampann' (பல்துறை) தொழில் முறைகள் மற்றும் மனிதர்களை உருவாக்குவதாகும்.
- புதுதில்லியில் மத்திய வர்த்தகத் துறையின் புதிய வளாகமான வனிஜியா பவனி (Vanijya Bhawan)-ற்கு பிரதம அமைச்சர் அடிக்கல் நாட்டினார். நவீன வசதிகளுடன் கூடிய முற்றிலும் காகித பயன்பாடற்ற அலுவலகமாக இது விளங்கும்.
- கடல் வழி மற்றும் கப்பற் கட்டும் துறைக்கான திறன் வளர்ச்சியில் நன்கு நிதி வசதியுடன் கூடிய ஸ்டார்ட் அப் (Start Up) நிறுவனமான, கடல் வழி மற்றும் கப்பற் கட்டுதலுக்கான சிறந்த மையம், மும்பையில் 6 ஆய்வுக் கூடங்கள் மற்றும் விசாகப்பட்டின வளாகத்தில் 18 ஆய்வுக் கூடங்கள் என மொத்தம் 24 ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளது. இது ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் முதல் வகையான கட்டமைப்பு ஆகும்.
- உத்தரக்காண்ட்டில் திரிவேந்திர சிங் ராவத் தலைமையிலான அரசு, ஆற்றில் செல்லும் வெள்ளைப் படகுகள், பாராகிளைடிங் மற்றும் இதர தண்ணீர் சம்பந்தமான விளையாட்டுகளுக்கு, அது தொடர்பான கொள்கை முடிவுகளை எடுக்கும் வரை, இந்த விளையாட்டுகளுக்கு அம்மாநில உயர்நீதி மன்றம் தடை விதித்துள்ளது.
- மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன அமைச்சகத்தின் கீழ் இயங்கும் காதி மற்றும் கிராம தொழில்கள் ஆணையமானது, தில்லியில் உள்ள ஜகத்பூரா கிராமத்தை தூய்மை இயக்க கிராமமாகத் தத்தெடுத்துள்ளது.
- புதுதில்லியின் சிஐஇடி (CIET)-ல் உள்ள தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கழகத்தில் (NCERT - National Council of Educational Research and Training) 3 நாள் தேசிய யோகா ஒலிம்பியாட் (National Yoga Olympiad) தொடங்கி வைக்கப்பட்டது. இது NCERT-ன் தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டு தேசிய யோகா ஒலிம்பியாட் ஆகும். இந்நிகழ்ச்சியின் போது நாடகத்தின் மகிழ்ச்சி (Joy of theatre) மற்றும் சங்கீத பயிற்சித் தொகுப்புகள் (Sangeet Training Package) ஆகிய இரண்டு புத்தகங்கள் வெளியிடப்பட்டன.
- தற்போது ஓசாகா கோபேவில் (Osaka-Kobel)-ல் உள்ள இந்தியத் தூதரகத்தின் பொதுச் செயலாளரான டி.ஆம்ஸ்ட்ராங் சங்சன் (IFS: 1997), ஐஸ்லாந்து குடியரசு நாட்டின் இந்தியத் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- 10வது பயங்கரவாத எதிர்ப்பிற்கான கூட்டுப் பணிக் குழுக் கூட்டம், யுக்தி ரீதியிலான நட்பு நாடுகளான இந்தியா மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு இடையே புது தில்லியில் நடைபெற்றது. அடுத்த பயங்கரவாத எதிர்ப்புக்கான கூட்டுப் பணிக் குழுக் கூட்டம் 2019-ல் ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.


# தேசியச் செய்திகள்

## ஜம்மு காஷ்மீரில் ஆளுநர் ஆட்சி

- குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் ஜம்மு காஷ்மீரில் ஆளுநர் ஆட்சியை அமல்படுத்த ஒப்புதல் அளித்துள்ளார்.
- ஜம்மு காஷ்மீரில் கடந்த நான்கு பத்தாண்டுகளில் (4 தசாப்தம்) ஆளுநர் ஆட்சி நடைபெறுவது இது எட்டாவது முறையாகும். ஜம்மு காஷ்மீரின் ஆளுநர் என்.என்.வோராவின் பணிக்காலத்தில் ஆளுநர் ஆட்சி நடைபெறுவது மூன்றாவது முறையாகும்.
- மாநில சட்டமன்றமானது இடைநீக்க நிலையில் வைக்கப்பட்டுள்ளது.
- மத்திய உள்துறை அமைச்சகமானது பி.பி.வியாஸ் உடன் சிறந்த காப் (COP) மற்றும் நக்சல் எதிர்ப்பு வல்லுநரான கே.விஜயகுமார் ஆகியோர்களை ஆளுநர் என்.என்.வோராவின் ஆலோசகர்களாக நியமித்துள்ளது.
- தலைமைச் செயலாளராக இருந்து பி.பி.வியாஸ் இருந்த இடத்திற்கு சத்தீஸ்கர் மாநில இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான பி.வி.ஆர் சுப்பிரமணியம் நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் (SIPRI)

- ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் (SIPRI-Stockholm International Peace Research Institute) மேம்படுத்தப்பட்ட எண்ணிக்கையின் படி, ஒன்பது அணு ஆயுத நாடுகளின் அணு ஆயுதங்களின் எண்ணிக்கையானது 2017 தொடக்கத்தில் 14, 935 லிருந்து 2018 தொடக்கத்தில் 14, 465 ஆகக் குறைந்துள்ளது.




*Source: SIPRI Yearbook 2018*

- இந்த ஒன்பது நாடுகளாவன : அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா, இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல் மற்றும் வட கொரியா.
- SIPRI என்பது சுயாதீன சிந்தனைச் சாவடி ஆகும். இது 1966 ஆண்டு முதல் திறந்த மூலங்களிலிருந்து கிடைக்கும் தகவல்களைத் தொகுக்கிறது.
- உலகின் மொத்த அணு ஆயுதங்களில் 92% ரஷ்யா (6850 அணு ஆயுதங்கள்) மற்றும் அமெரிக்கா (6450 அணு ஆயுதங்கள்) ஆகிய நாடுகளிடம் உள்ளன.
- இரு நாடுகளுக்கிடையேயான 2010ஆம் ஆண்டின் பாதுகாப்பு முக்கியத்துவமிக்க

தாக்குதல் ஆயுதங்களின் மேலும் கூடுதலான கட்டுப்பாடு மற்றும் குறைப்பிற்கான நடவடிக்கைகள் மீதான ஒப்பந்தத்தின் படி அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகிய இரு நாடுகளின் ஆயுதக் கட்டுப்பாட்டு பொறுப்புகளின் காரணமாக இந்தக் குறைப்பு நிகழ்ந்துள்ளது.

## தேசிய சுகாதார திட்ட அறிக்கை

- தேசிய சுகாதார திட்டத்தின் பொதுவான ஆய்வுப் பணியின் 11-வது அறிக்கையின் படி, குடும்பக் கட்டுப்பாட்டில் சீரற்ற சுமை தாங்குபவர்களாக பெண்கள் உள்ளனர். நாட்டில் 93% அதிகமான பெண்கள் கருத்தடை செய்யப்பட்டவர்களாக உள்ளனர்.
- 2017-18ஆம் ஆண்டில் (அக்டோபர் வரை) மொத்த கருத்தடைகளின் எண்ணிக்கையானது 14,73,418 ஆகும். இவற்றில் பெண்கள் கருத்தடைகள் (Tubectomiel) 93.1% மற்றும் ஆண்கள் கருத்தடைகள் (Vasectomy) 6.8% ஆகும்.
- இந்த அறிக்கையானது சமீபத்திய சுகாதார மேலாண்மை தகவல் அமைப்பின் (HMIS - Health Management Information System) அடிப்படையில் வெளியிடப்பட்டது. தேசிய சுகாதார திட்டத்தின் கருத்தடை உள்ளிட்ட பல்வேறு அளவுருக்கள் தொடர்பான தகவல்களை மாநிலங்கள் HMIS-ல் பதிவேற்றம் செய்யும்.
- நாட்டில் முந்தைய வருடங்களில் பெண்களின் கருத்தடைகள் 98% ஆக இருந்தது. அவற்றுடன் ஒப்பிடுகையில் சமீபத்திய ஆய்வு குறுகிய முன்னேற்றத்தைக் காட்டுகிறது.
- பொதுவான ஆய்வுப் பணி (CRM-Common Review Mission) என்பது தேசிய சுகாதார திட்டத்தின் வெளிப் பரிணாமம் ஆகும்.

## மெக்கன்ஸே உலகளாவிய நிறுவனத்தின் ஆசிய பசிபிக் பிராந்தியத்திற்கான அறிக்கை

- மெக்கன்ஸே உலகளாவிய நிறுவனத்தின் ஆசிய பசிபிக் பிராந்தியத்திற்கான சமீபத்திய அறிக்கையின் படி, இந்தியாவில் பாலின சமத்துவமின்மையானது வேலை செய்யும் இடத்தில் மிகவும் அதிக அளவில் உள்ளது. சட்டப் பாதுகாப்பு மற்றும் அரசியல் பங்கேற்பு ஆகியவற்றின் அடிப்படையிலும் பாலின சமத்துவமின்மை காணப்படுகிறது.
- பாலின சமத்துவமின்மையில் இந்தியாவின் மதிப்பெண் ஆனது வேலை செய்யும் இடத்தில் 0.30 ஆகவும், சட்டப் பாதுகாப்பு மற்றும் அரசியல் பங்கேற்பு அடிப்படையில் 0.78 ஆகவும் உள்ளது.
- GPS(GPS-Gender Pality Store) -ன் அனைத்து நான்கு வகையிலும் ஆசியா பசிபிக் சராசரியை விட இந்தியா பின் தங்கியுள்ளது. ஆனால் வங்காள தேசம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் முன்னிலையில் உள்ளது.
- இந்த அறிக்கையானது பாலின சமநிலை மதிப்பெண் அடிப்படையில் சமநிலையை மதிப்பிட்டுள்ளது. GPS-ஆனது வேலை மற்றும் சமுதாயத்தில் நான்கு பரந்த பிரிவுகளின் கீழ் பாலின சமநிலையின் 15 குறிகாட்டிகளைப் பயன்படுத்துகிறது.
- இந்த நாடுகளின் மதிப்பெண் 0 (குறிப்பிடப்படுகிற சமநிலையின்மை) முதல் 1 (குறிப்பிடப்படுகிற சமநிலை) வரை இருக்கும். இந்த மதிப்பெண் அடிப்படையில் நாடுகள் தரநிலைபடுத்தப்படும்.

## இ.ஸ்ரீதரன் குழு

- நாட்டில் மெட்ரோ ரயில் அமைப்புகள் குறித்தத் தரங்களை வகுக்க அமைக்கும் குழுவிற்கு பிரதம அமைச்சர் ஒப்புதல் அளித்துள்ளார்.
- இக்குழுவின் தலைவர் இ.ஸ்ரீதரன் (பிரபலமாக அறியப்படுகிற இந்தியாவின் மெட்ரோ மனிதன்) ஆவார்.
- நாட்டில் மெட்ரோ இரயில் அமைப்புகளால் பின்பற்றப்படும் பல்வேறு கூறுகளுக்கான ஒரே மாதிரியான தரங்களை இக்குழு கொண்டு வர உள்ளது.

---------------